DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 46/2022
**Depositions of PW 1 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | பாலமுருகன் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th Day of October 2025

Signature of Witness.

**<u>07.10.2025</u>**

1 ஆம் எதிரி ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 2 ஆம்எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிவகாசி வட்டம், ஆனைக்கூட்டம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 22.05.2021 ஆம் தேதியன்று செவலூர் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது செவலூர் கிராமம் சர்வே எண்.984/1D1 தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு பாத்தியப்பட்ட இடத்திலுள்ள பனை மரங்களை வெட்டுவதாக பக்கத்து காட்டினை சேர்ந்தவர் போனில் எனக்கு தகவல் சொன்னார்கள். அதன் பேரில் நானும், எனது கிராம உதவியாளரும் மதியம் சுமார் 02.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம், அங்கு பனை மரங்கள் வெட்டப்பட்டு கிடந்தது. அந்த இடத்திலிருந்து வெட்டப்பட்ட பனை மரங்களில் 17 பனை மரத்துண்டுகளை கடத்திவிட்டார்கள். 13 பனை மரத்துண்டுகள் 146 துண்டுகளாக கிடந்தது. மேற்படி இடத்தினை ஆஜர் எதிரியான பிச்சை மகன் பாலசுப்பிரமணியன் என்பவர் கருப்பையா மகன் நல்லுகண்ணு என்பவருக்கு அரசு அனுமதியில்லாமல் விற்பனை

செய்திருந்தது தெரியவந்தது. பூமிதான இடத்திலுள்ள மரங்களை வெட்டுவதற்கு முன்பு அரசிடம் அனுமதி பெறவேண்டும் என்பதால் சம்பவம் குறித்து எம்.புதுப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் சம்பவம் குறித்து நான் அளித்தது தான். புகார்மனு **அ.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட பனை மரங்களின் மதிப்பு சுமார் ரூ.39,000/– இருக்கும். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்திலுள்ள பனை மரத்துண்டுகள் தான் சம்பவ இடத்தில் நான் பார்த்ததாகும். வெட்டப்பட்ட பனை மரத்துண்டுகளை காட்டும் புகைப்படம் **அ.சா.ஆ–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் எங்கு வசித்து வந்தேன் என்றால் காளையார்குறிச்சி கிராமத்தில் வசித்து வந்தேன். கிராம உதவியாளர் அமல்ராஜ் செவலூர் கிராமத்தில் தான் வசித்து வருகிறார். எனக்கும், கிராம உதவியாளருக்கும் வருகை பதிவேடு வட்டாட்சியார் அலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறது என்றால் சரியல்ல, நாங்கள் கிராம நிர்வாக அலுவலகத்தில் தான் இருப்போம். நாங்கள் சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் பணிக்கு வந்த விவரம் வட்டாட்சியருக்கு எதன் அடிப்படையில் தெரியும் என்றால் வழக்கம் போல் தினசரி வேலை நாட்களில் அலுவலகம் சென்றுவிடுவோம், விடுமுறை எடுத்தால் மட்டும் விடுப்பு விண்ணப்பம் கொடுப்போம்.

2) கிராம உதவியாளர் தினசரி வட்டாட்சியர் அலுவலகம் சென்று வருகைப் பதிவேட்டில் கையொப்பம் செய்வாரா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலகத்தில் தான் இருப்பார். சம்பவ இடத்தில் பனை மரங்கள் வெட்டப்படுவதாக சொல்லப்படும் தகவலை எனக்கு கூறியது யார் என்றால் சொக்கலிங்கம் என்பவர் தெரிவித்தார். மேற்படி சொக்கலிங்கத்தை

விசாரித்தால் நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்ற விவரமும், சம்பவ இடத்தில் பனை மரங்கள் வெட்டப்பட்டு கிடந்ததா என்ற விவரமும் தெரிய வரும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பனை மரங்கள் வெட்டப்பட்டு கிடக்கின்றன என்ற தகவலை எனது வட்டாட்சியருக்கும், கோட்டாச்சியருக்கும் தெரிவித்தேனா என்றால் நான் சம்பவம் பற்றி தகவலை வருவாய் ஆய்வாளருக்கு போன் மூலம் தெரிவித்தேன், வருவாய் ஆய்வாளர் வட்டாட்சியருக்கு தெரிவிப்பதாக கூறினார்.

3) சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்கு வருவாய் ஆய்வாளரும், வட்டாட்சியரும் வந்தார்களா என்றால் வரவில்லை. நான் சம்பவம் தொடர்பாக வருவாய் ஆய்வாளருக்கு போன் மூலம் தெரிவித்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் வருவாய் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்திருந்தால் அவர் எனது அலுவலகத்திற்கு வந்திருப்பார் என்றால் சரியல்ல. எனது அலுவகத்திலிருந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் எவ்வளவு தொலைவில் அமைந்துள்ள என்றால் சுமார் 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. எனது அலுவகத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு தொலைவில் அமைந்துள்ள என்றால் சுமார் 9 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. எனது அலுவலகத்தில் காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோரது செல்போன் எண்கள் இருக்கும் என்றால் சரிதான். நடந்ததாக கூறப்படும்சம்பவம் பற்றி நான் காவல் உதவி ஆய்வாளருக்கு தகவல் சொன்னேனா என்றால் சம்பவ இடத்திற்கு சென்று போய் பார்த்துவிட்டு பின்பு நான் தகவல் சொன்னேன்.

4) சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் இந்தியா முழுவதும் கொரேனா பெருந்தொற்று காரணமாக சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் ஊரடங்கு அமலில் இருந்தது என்றால் சரிதான். ஊரடங்கு அமலில்

இருந்ததால் நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் பனை மரங்கள் வெட்டப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சம்பவ இடத்திற்கு அருகில் வசிக்கும் சொக்கலிங்கம் இரண்டு நாட்கள் ஊருக்கு சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்த போது சம்பவ இடத்தில் பனை மரங்கள் வெட்டப்பட்டு கிடந்ததாகவும், சம்பவ இடம் பூமிதான இடம் என்பதால் அரசு அனுமதியில்லாமல் மரங்களை வெட்டக்கூடாது என்ற தகவலையும் சனிக்கிழமை அன்று வந்தவர் என்னிடம் போனில் சொன்னார்.

5) எனக்கு தகவல் தெரிவித்ததாக சொல்லப்படும் சொக்கலிங்கம் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் அவரது ஊர் பெயரை கூறினார், ஆனால் தற்போது ஞாபகம் இல்லை. எனது கிராம உதவியாளருக்கு மேற்படி சொக்கலிங்கத்தின் ஊர் விவரம் தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்ததாக கூறப்படும் பனை மரங்களுக்கு எண் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் இல்லை. கிராமத்திலுள்ள பனை மரங்களின் எண்ணிக்கை எத்தனை என்ற விவரங்களை கணக்கிட்டு அதற்குரிய பதிவேட்டில் பதிவு செய்து கொள்வோம் என்றாலும், ஒவ்வொரு மாதமும் பனை மரங்களை கணக்கிட்டு அதுபற்றி விவரத்தையும் பதிவேட்டில் பதிவு செய்து கொள்வோம் என்றால் சரிதான்.

6) மேற்படி சொக்கலிங்கம் என்னிடம் தகவல் கூறும் போது எத்தனை பனை மரங்கள் வெட்டப்பட்டு உள்ளன என்ற எண்ணிக்கையை கூறினாரா என்றால் இல்லை, நான் அங்கு சென்று தான் வெட்டப்பட்ட பனை மரங்களை கணக்கிட்டேன். அவைகள் துண்டு துண்டுகளாக கிடந்தன. வெட்டப்பட்டு கிடந்ததாக கூறப்படும் பனை மரத்துண்டுகளில் எந்தவிதமான எண்ணும் எழுதப்படாத நிலையில் எத்தனை பனை மரங்கள் வெட்டப்பட்டன என்பதை எவ்வாறு கூறுகிறேன் என்றால் ஏற்கனவே எங்களிடமிருந்த அடங்கல் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த பனை

மரங்களின் எண்ணிக்கையை கொண்டு சம்பவ இடத்திலிருந்த பனை மரங்களில் வெட்டப்பட்டதை கணக்கிட்டோம். அடங்கல் பதிவேட்டில் பனை மரங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் குறிப்பிட்ட பரப்பளவில் உள்ள பனை மரங்கள் பற்றி விவரம் இருக்கும், எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்காது.

7) சம்பவ இடத்திற்கு நானும், எனது உதவியாளரும் எதில் வந்தோம் என்றால் எனது வாகனத்தில் வந்தோம். எனக்கு தகவல் சொன்ன சொக்கலிங்கம் காவல் நிலையத்திற்கு எங்களுடன் வந்தாரா என்றால் நான் வந்தால் என்னுடன் சண்டை போடுவார்கள் என்று சொல்லி சொக்கலிங்கம் காவல் நிலையம் வரவில்லை. எங்களுக்கு பணி நேரம் எவ்வளவு என்றால் 24 மணி நேரமும் பணி நேரம் தான். அவசர நேரத்தில் எந்த நேரத்திலும் பணிக்கு செல்லவேண்டும். நான் சம்பவ இடத்திற்கு கிளம்பும் போது நேரம் என்னவென்றால் மதியம் சுமார் 01.30 நேரம் ஆகும். காவல் நிலையத்திற்கு செல்லும் போது நேரம் என்னவென்றால் இரவு சுமார் 08.30-09.00 மணியிருக்கும். புகாரை யார் எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன். புகார் அளித்த பின்னர் நானும், எனது உதவியாளரும் உதவி ஆய்வாளருக்கு சம்பவ இடத்தை காண்பித்தோமா என்றால் புகார் அளிப்பதற்கு முன்பாகவே மாலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து இடத்தை பார்த்து சென்றார்.

8) உதவி ஆய்வாளர் 22.05.2021 ஆம் தேதியன்று சம்பவ இடத்திற்கு மாலை 05.30 மணிக்கு வந்தபோது சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கொண்டார் என்றால் சரிதான். மறுநாள் காலையிலும் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். சம்பவ இடத்திலிருந்து மரத்துண்டுகளை எந்த வாகனத்தில் காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தார்கள் என்றால் டிராக்டரில் கொண்டு வந்தார்கள். நேரம் சரியாக

ஞாபகம் இல்லை. மரத்துண்டுகளை ஏற்றிச் சென்றதாக கூறப்படும் டிராக்டரை ஓட்டி வந்த ஓட்டுநரின் பெயர் விவரம் தெரியுமா என்றால் காவல் நிலையத்திலிருந்து தான் டிராக்டரை வரவைத்திருந்தார்கள். ஓட்டுநரின் பெயர் விவரம் எனக்கு தெரியாது. மேற்படி டிராக்டரின் ஓட்டுநரை விசாரித்தால் உண்மையில் சம்பவ இடத்திலிருந்து பனை மரங்களை ஏற்றிகொண்டுவரப்பட்டனவா என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

9) டிராக்டர் ஓட்டுநரிடமும், என்னுடன் இருந்த கிராம உதவி யாளரிடமும், என்னிடமும் அத்தாட்சியில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஞாபகம் இல்லை. அத்தாட்சியில் என் முன்பு போலீசார் கையொப்பம் செய்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் பனை மரத்துண்டுகள் கிடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அளித்த புகாரில் தேதி குறிப்பிடபட்டுள்ளதா என்றால் தனியாக தேதி குறிப்பிடவில்லை, புகாரின் சங்கதியில் குறிப்பிட்டுள்ளேன். நான் சொன்ன நாள், நேரத்தில் புகார் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் அளித்த புகாரில் 146 மரத்துண்டுகள் சம்பவ இடத்தில் கிடந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

10) உண்மையில் சம்பவம் நடந்திருந்ததால் சம்பவ இடத்திற்கு வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் ஆகியோர் வந்து பார்வையிட்டு என்னை புகார் அளிக்குமாறு அறிவுறுத்தியிருப்பார்கள் என்றால் சம்பவம் பற்றி வருவாய் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். முதல் விசாரணையில் சொன்ன எதிரிகளின் பெயர்களை தான் எனது புகார் மற்றும் போலீசாரிடம் அளித்த வாக்குமூலங்களிலும் சொன்னேன் என்றால்

சரிதான். புள்ளி விவரக் கணக்கிற்காக போலீசாரால் பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை நான் எப்போதும் பார்த்தில்லை என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் நான் சம்பவ இடத்திற்கு சென்று எதிரிகளை பார்த்து விசாரித்துவிட்டு தான் புகார் அளித்தேன்.